


# தமிழ்ச்சிட்டு

## சிறுவர் கலையிதழ்



## ஒவ்வொரு நொடியும் வாழ்வதே வாழ்க்கை!

ஒவ்வொரு நொடியும்
வாழ்வதே வாழ்க்கை
உன்னி நடந்திடுக!
எவ்வொரு நொடியும்
ஏறும் படியாய்
ஏற்றுக் கடந்திடுக!

கண்ணிமைப் பொழுதும்
கண்ணியம் மிளிரக்
கருதி ஒழுகிடுக!
எண்ணமும் சொல்லும்
செயலும் என்றும்
இனிதாய்ப் பழகிடுக!

பொறியள வேனும்
தீப்படின் பெரிய
போரை அழித்துவிடும்!
சிறுபொழு தேனும்
தீமை வாழ்வின்
சிறப்பை ஒழித்துவிடும்!

—இறை.

குரல்: 7.
இசை: 6-8.

விலை
௨௫ காசு.

# ஒழுக்கம் போற்றுக!

—மா. தேன்மொழி.

ஒழுக்க மாக வாழ்வதே
உயர்ந்த வாழ்க்கை என்பதாம்
இழுக்க முற்ற வாழ்வினும்
இறந்து போதல் இனியதே!

எண்ணு கின்ற எண்ணமும்
எடுத்துப் பேசும் சொற்களும்
திண்ணம் ஒழுக்க மாகவே
திகழ வேண்டும் என்றுமே!

உண்ணுகின்ற நிலையிலும்
உடுத்துகின்ற நிலையிலும்
கண்கள் காணும் நிலையிலும்
கருதிக் காக்க ஒழுக்கமே!

நகைப்புக் காக வாயினும்
நடிப்புக் காக வாயினும்
தகையி ழப்ப ஒழுக்கத்தில்
தவற லாகா[து] உணருவீர்!

பகைவர் கூடிச் சாடினும்
பசியால் நொந்து வாடினும்
திகைத்து நிற்கும் போதினும்
தீர்தல் ஆகா [து] ஒழுக்கமே!

உதவும் நிலையில் வாழினும்
உதவி யேற்க நேரினும்
பதவி பட்டம் சேரினும்
பற்றி நிற்க ஒழுக்கமே!

வெற்றி கொள்ளும் நிலையினும்
வீழ்ச்சி யுற்ற போதினும்
நிற்கும் ஒழுக்க நெறியினில்
நீங்கி டாமை வேண்டுமே!

அழுது தீர்ப்ப தாயினும்
அகம கிழ்ச்சி யாயினும்
பொழுது போக்கே யாயினும்
போற்றல் வேண்டும் ஒழுக்கமே!




# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்–7.–தி. பி. ௨௦௦௫.–கும்பம்–மேழம் (மார்–மே 74)–இசை–6–8.


## அறிஞரைப் போற்றுவோம்!

தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும். இல்லையேல் அவ்வாறு தோன்றிப் புகழ் மணக்க வாழும் சான்றோர்களையாவது போற்றி, புரந்து அவர்கள் செல்லும் பாதையில் சென்று முடிவில் புகழ் பெற வேண்டும். சான்றோர்கள் என்பவர்கள் யார்? எவ்வாறு புகழ் பெறத் தோன்றினர்? இவ்வாறு உங்கள் உள்ளம் எழுப்பும் வினாவிற்குரிய விடையை நீங்களே எண்ணி ஆய்ந்துப் பாருங்கள். சான்றோன் தனக்கு இயற்கையாக அமைந்துள்ள கடல் போன்ற அன்பைத் தன் அறிவு என்னும் சூட்டினால் உணர்வென்னும் குளிர் முகிலாக்கி அருள் என்ற நன் மழையைப் பொழிந்து வளமற்று வறண்டு கிடக்கும் உள்ளங்களைச் செழிப்பாக்கி, அதில் இனிய எண்ணங்களை விளைவிக்கின்றான். இவ்வாறு தன் அறிவையும், அன்பையும் தனக்கெனக் கொள்ளாது பொதுமக்களுக்காகவே ஈந்து பெருந்தொண்டிழைக்கும் அவனன்றி யார் சான்றோன்? யார் தொண்டன்? இத்தகைய பொதுத் தொண்டின் மூலம் அவன் எண்ணிய எண்ணம் மலர்ந்து புகழ்மணம் வீசுகின்றது. மணம் நுகர்ந்தவர்கள் வண்டென நாடி அவன் அன்பையும், அறிவையும் பருகி மகிழ்கின்றனர். அவன்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

புகழ் மணத்தைப் பெருக்கத் துணை நிற்பவர்களும், பூவோடு சேர்ந்து நாரும் மணப்பது போல் புகழ் மணக்கப்பெற்று மகிழ்ச்சி யடைகின்றனர்.

நாட்டு மக்களுக்காகத் தம்மை, வாழ்வை எண்ணாது, எண்ண விரும்பாது அழித்துக் கொண்டு பிறர்க்காக வாழ்ந்தவர்களும், வாழ் பவர்களும் சிலரே. இவ்வாறு வாழும் பேருள்ளங்களை நாம் அடை யாளம் கண்டு கொள்ள வேண்டும். அவர்களுக்குத் துணை நில்லாது போனாலும் துன்பம் கொடுக்காமல் இருந்தால் போதுமென அவர்கள் எண்ணுவார்கள். ஏனெனில் அவர்கள் உள்ளம் தெளிந்து விரைந்து செல்லக் கூடிய நீரோடை போன்றது. அவர்கள் உணர்வில் நம் உணர்வுகள் சில நேரங்களில் நீரில் எறியப்பட்ட கல்லைப்போன்று இருப்பது அவர்கள் பொதுத் தொண்டிற்கு எவ்வளவு தடையாக இருக்கும் தெரியுமா?

சாக்ரட்டீசு என்னும் மெய்ப்பொருளியல் பேரறிஞன் மக்களுக்குத் தன் உள்ளத் தெழுந்த அறிவு உணர்ச்சிகளை வெளிப் படுத்தியே தன் வாழ்நாளை அழித்துக் கொண்டான். அவனுக்குத் துணையாக விருந்த பிளேட்டோ அவனை வெளிப்படுத்தினான். இயேசு கிறித்துவுக்குப் பன்னிரண்டு தொண்டர்கள்; சான்சனுக்கு ஒரு பாசுவல்; அலெக்சாந்தருக்கு ஒரு அரிசுடாட்டில் முன்னின்று தொண்டாற்றி அப்பெரியார்களின் புகழைப்போலவே தாங்களும் புகழடைந்தார்கள்.

அதுபோல் நாமும் நம் காலத்து அறிஞர்களை, தொண்டர்களை, முன்னோடிகளைப் போற்றி அவர்களுக்குத் துணையாக இருப்போம். அவர்கள் சொல்வதை என்னவென்று கேட்போம். அது சரியாக யிருந்தால் அதைப் பிறருக்கும் சொல்வோம். ஊக்கம் கொடுத்து மேன்மேலும் அவர்களுக்குத் தேவையான ஆக்கங்கள் செய்வோம். புரக்குநர்களைத் தேடி அவர்களை அவர்களுக்குத் துணையாக யிருக்க எடுத்துச் சொல்வோம். சான்றோர்கள் என்பவர்கள் ஒரு நாட்டுக்கே, ஏன், உலகுக்கே உரிமையான சொத்து போன்றவர்கள். அவர் களுடைய புகழை எப்படி வேண்டுமானாலும் பரப்ப நமக்கு உரிமை யுண்டு. ஆனால் அவ்வாறு நாம் அவர்களின் புகழைப் பரப்புவதற்கு மாறாகக் காழ்ப்புணர்வு கொண்டு பழி கூறித் திரிவோமானால் சான்றோர்களின் மென்மையான நுண்ணுணர்வுடைய உள்ளத்தை உடைத்த பழியினை நாமன்றி யார் ஏற்றுக் கொள்வர்?

மெய்யுணர்வுடைய அறிஞர்களைப் பலவாறு அஃதாவது நம் உள்ளம் ஏற்கும் வகையில் அறிந்து அவர்களைப் பின் பற்றி நடக்கு மளவிற்கு நம்மைநாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அக்காலத்

திலும், இக்காலத்திலும் சான்றோர்களை அழிப்பதற்கென்றே பிறந்த காழ்ப்புள்ளங் கொண்டோர் சிலரின் செயல்களைக் கேட்டும், கண்டும் நம் மனம் பதறுகின்றது. தன் அரிமாக் குரலை எட்டுத் திசையிலும் அஞ்சாது ஒலிக்கச்செய்து, தன் புகழ்க்கொடியை உயர்த்திய பேரறிஞன் சாக்ரட்டீசை நஞ்சு கொடுத்தும், தன்னுடன் உண்டு உறங்கி மகிழ்ந்திருந்த பன்னிரண்டு தொண்டர்களில் ஒருவனாலேயே காட்டிக்கொடுக்கப்பட்ட ஏசுகிறித்துவைக் கொடுமையாகக் குறுக்கையில் (சிலுவையில்) அறைந்தும் கொன்றனர். இவ்வாறு எத்தனையோ அறிஞர்களைப் பழித்தும் இழித்தும் பேசித் தன் கொடுமைக் கைகளினால் அழித்த இவ்வுலகம் இக்காலத்தில் புகழ்ந்து கைதொழுது வணங்க வில்லையா? அறிஞர்களை மதிக்காத அரசும், மக்களும் எந்நாளும் உருப்படியாக முடியாது. உருப்படியானதாக வரலாறும் இல்லை.

இள உள்ளங்களே! அறிஞனுடைய சிறு எண்ணங்கள் கூட என்றும் அழிவதில்லை. அவன் என்றோ நினைத்தது எப்போதோ நடக்கின்றது. "பல நூல்களைக்கற்றும் நம் அறிவு சிறப்புற வில்லையே! நம்மையாரும் புகழ்வதில்லையே!" என்ற ஏக்கவுணர் வுடனும் காழ்ப்புணர்வுடனும் பிறரை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள மக்கள் வடிவங்கொண்ட விலங்குகள் வாழும் இடம் நாடு என்று சொல்லுதற் குரியதாக இருக்குமா?

ஆகையால் என் அருமைத் தமிழ்ச்சிட்டுகளே! மெய்யுணர்வை மதிப்போம். மெய்யறிவு வாய்ந்த மேலோர்களை, நம்மை உய்விக்க வந்த தலைவரென்று வணங்குவோம். அவர்கள்மீது அன்பு கொள் வோம். அவர்கட்குத் துணை நிற்போம். அவர்கள் அறிஞர்கள்தாமே என்று அவர்கள் கூறுவதை விளங்கிக் கொள்ளாது அவர்கள் சொல் வதையே செய்தோமானால் அதைவிட இழிந்தது வேறு எதுவும் இல்லை.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பதற்கு ஏற்றவாறு எதனையும் ஆய்ந்து மெய்யறிவை உணர்வோம். கற்றவர்கள் என்று கூறி அனைத்தையும் அரையுங் குறையுமாகத் தெரிந்து கொண்டு, தம்மை அறிஞராகவும், அரசியல் கட்சித் தலைவராகவும் எண்ணிப் பட்டம் பதவிகளின் மீதும் பற்றுக் கொண்டு பித்துப் பிடித்தவர்களைப் போன்று உலவுவது சான்றோர்களுக்கு நகைப்பை ஊட்டினாலும், அதைவிட வருத்தமான நிலை அவர்களுக்கு வேறு என்ன உள்ளது?

—தாமரை பெருஞ்சித்திரன்.

# வாய்மொழி.

—இறைக்குருவன்.

துன்பத்தால் நெஞ்சம்
துவண்டு மிகவருந்தி
என்னதான் செய்வதென்றே
ஏதும் அறியேனுய்
முன்னர் நிகழ்ந்து
முடிந்தனவும் ஆங்கவற்ருல்
பின்னே விளைவு
பெருந்துயராய் மூண்டதுவும்
எண்ணியெண்ணி மேன்மேலும்
ஏக்கப் பெருமூச்சே
எண்ணில் அடங்காப்
பலமுறை விட்டபடி,

நீர்வற்றிப் புற்பூண்டும்
நெட்டை மரக்குலமும்
சோர்வுற்று நிற்கும்
கரைகள் இடைப்பட்ட
பள்ளக் காட்டாற்றின்
பருமணலில் தள்ளாடி
மெள்ள நடந்தயர்ந்தேன்
மேலும் நடப்பதற்கு
ஆற்ரு[து]அமர்ந்தேன்,மேல்
ஆடை விரித்ததனின்
மேற்படுத்தேன் வெங்கதிரோன்
மேற்றிசையில் போய்வீழ்ந்தான்.

புள்ளினங்கள் தம்முடைய
புக்கில் தமைநாடி
தெள்ளுதமிழ் பேசித்
திசைதோறும் போயினவால்.

வையம்இருள் கவிப்பால்
மங்கினும் கீழ்வானில்
பைய எழுந்தமதி
பால்நிலவை வீசிற்று,

சுமைநிறைந்த நெஞ்சோடும்
சோர்ந்து கிடப்ப
இமைமூடி எவ்வளவு
நேரம் கடந்ததுவோ!

நெற்றியில் ஏதோ
நிகழ விழிப்படைந்(து)
உற்றுப்பார்த் தேன்; ஆ!
ஒளியுமிழும் கண்மலர்கள்!
புன்முறுவல்; நன்றே
அமைதி பொலியுமுகம்
என்னவென்று சொல்வேன்,
எழில்நிலவும் மங்கிற்று!

தூய்மை மணக்கும்
தோற்றப் பெரியார் நம்
தாய்மொழிக்கு மேம்பாடு
தந்ததிரு வள்ளுவர்தாம்
என்றே உணர்ந்தேன்
எழுந்து வணங்கிநின்றேன்.

"நன்று மகனே,
அமர்ந்திடுக!" என்று
பணித்தார் அவர்முன்
பணிவாய் அமர்ந்தேன்.
"உணங்கிய(து] என்ன?
உரைத்திடுக!" என்றனர்;யான்

ஓவென்(று) அழுது
"பெருமானே! என்றனுக்குச்
சாவென்று நேருமெனப்
பார்த்திருப்பது அல்லாது
வாழ்க்கைப்பற்(று) இல்லை
வறுமை மிகுந்ததுவால்
பாழ்த்த உடலும்
பலப்பலநோய் உற்ற(து);ஐய!

(அடுத்த இதழில் முடியும்.)



# குட்டிக்கதை

—மா. பொழிலன்.

பேரரசர் அக்பரது அவைக்களத்தில் அறிவு படைத்த அமைச்சர்கள் பலர் இருந்து வந்தனர் அவர்களுள் மிகவும் நுண்மாண்நுழைபுலம் வாய்ந்தவர் 'பீர்பால்' என்ற சிறந்த அமைச்சராவார். அக்பர் வெற்றிலை போடுவார். ஆனால் வெற்றிலையோடு புகையிலையைக் கலந்து போடும் வழக்கம் அவரிடம் இல்லை. அவருக்குப் புகையிலையின் மீது விருப்பமும் இல்லை. அமைச்சர் பீர்பாலோ புகையிலை இல்லாமல் வெற்றிலை போடும வழக்கமுடையவர் அல்லர்.

ஒரு நாள் அரண்மனை மாளிகையின் மாடியில் அக்பர் நின்று கொண்டு பார்த்த பொழுது தொட்டியொன்றில் இருந்த குப்பைத் தாளை ஒரு கழுதை மென்று கொண்டிருந்தது. அந்தத் தொட்டியில் இருந்த புகையிலை மடிப்பை மட்டும் அஃது உண்ணாமல் சென்று விட்டது.

உடனே அக்பர் பீர்பாலை அழைத்தார், பீர்பால் ஓடிவந்து, "தாம் அழைக்கப் பெற்ற கரணியம் என்ன?" என வினவினார். பேரரசர் அக்பர் அவரைப் பார்த்து, "அமைச்சரே! அந்தத் தொட்டியில் உள்ள எல்லாக் குப்பைத் தாளையும் உண்ட அக்கழுதை அந்தப் புகையிலை மடிப்பை மட்டும் விட்டு விட்டுச் சென்று விட்டது பார்த்தீர்களா?" என்றார். "ஆம் அரசே! அதற்கு இப்பொழுதென்ன?" என்று கேட்டார் பீர்பால். அரசர் உடனே, "அமைச்சரே! கழுதைகள் கூடப் புகையிலையை உண்பதில்லையே!," (தாங்கள் உண்கிறீர்கள்) என்று கூறினார். உடனே மதியமைச்சர் பீர்பால் சற்றும் தயங்காமல், "அரசே! கழுதைகளெல்லாம் புகையிலையை உண்பதில்லையே!' (அரசருட்பட) என்றார்.

அரசர் அவர் அறிவுத்திறனைக் கண்டு வியந்து அவருக்குப் பரிசு வழங்கினார். ஆகையினால்,

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்னும் திருக்குறளின் மெய்ப்பொருள் விளங்குதல் காண்க! O

# பறக்க இயலாத பறவைகள்.

—நா. எழில்-மகிழ்நன்.

பறவைகள், பறக்கும் இயல்புடையன. பறக்கின்றமையினுலேயே அப்பெயர் பெற்றன. ஆனுல் சில பறவைகள் பறக்க இயலாமல் நடந்தே ஓடித் தத்தம் வாழ்வினைச் செம்மையாக நடத்தி வருகின்றன. அவற்றில் சிறப்பாக மூன்று உயிரிகளை (பிராணிகளை)ச் சொல்லலாம், அவை நெருப்புக்கோழி, ஈமு, கீவி. இம்மூன்றின் இயல்புகளையும் வாழ்வியலையும் ஓரளவு ஈண்டு நோக்குவோம்.

நெருப்புக்கோழி:- இதன் உடலுக்கேற்றவாறு இறகு வளர்ச்சி இல்லை. மேலும், பறக்கத் தேவையான 'ஏரா 'என்னும் குத்தெலும்பும், நெருப்புப் கோழியின் உடலமைப்பில் இல்லை. ஆனுல் இதன் கால்கள், ஓடுவதற்கு ஏற்றவாறு மிகவும் வலிவுள்ளவாக அமைந்துள்ளன. பறவைகட்குப் பொதுவாக கால்களில் நான்கு விரல்களிருக்கும். ஆனுல் நெருப்புக் கோழிக்கு இரு விரல்களே உள்ளன. அதிலும் பெருவிரலே இதன் நிறை முழுவதையும் தாங்கும். ஓடும் ஆற்றலுள்ள எல்லாப் பறவைகளுக்கும், நான்கைவிட குறைவாக விரல்களிருக்கும்.

காட்டில் வாழும் நெருப்புக் கோழி தழைகள், விதைகள், சிறு பறவைகள், புழு, பூச்சிகள் முதலியனவற்றை உணவாகக் கொள்ளும். வீட்டில் வாழும் நெருப்புக் கோழி கண்ணுடித் துண்டுகள், எலும்புத் துண்டுகள் முதலியனவற்றைத் தின்னும். ஓரேயிடத்தில் பல முட்டைகளிட்டு, அவைமீது 42 நாள்கள் அடைகாக்கும். ஒரு முட்டையின் அளவு கோழிமுட்டையின் அளவைப் போல் 12 மடங்குப் பெரிதாக இருக்கும். அடைகாக்கும் முட்டையின் மேல் அதிக வெப்பம் பட, கதிரவனின் கதிர்கள் அவைமேல் படுமாறு செய்து விட்டு முட்டையின் அருகிலிருந்து முட்டையைக் காவல்காக்கும். ஆண்டுக்கு ஒரு முறையே முட்டையிட்டு அடைகாக்கும்.

முட்டையினின்று குஞ்சு வெளிவந்ததும், இயல்பாக ஓடித் திரிந்து வாழும். நெருப்புக் கோழியின் கழுத்திலும் தொடையிலும் இறகுகளில்லை. அதனுல் அப்பகுதிகள் அரத்தம் போல் சிவந்திருக்கும். இவை இப்போது தென்னுப்பிரிக்காவிலும் அரேபியாவிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒட்டகத்தைப் போல் நெருப்புக் கோழியும் மணற்காடுகளில் அலைந்து திரியும்.

ஈமு (Emu): ஈமு ஆத்திரேலியாவில் மிகுதியும் காணப்படுகின்றன. இவை சிறுசிறுகூட்டமாக காடுகளிலும், புல்வெளி

களிலும் வாழும். ஈமு பழங்கள் கிழங்குகள் முதலியனவற்றை உட்கொள்ளும். உணவுக்காக நிலத்திணை (தாவரம்) களைப் பெருமளவில் அழிக்கும். நேராக நிமிர்ந்து நிற்கும் போது இதன் உயரம் ஏறத்தாழ 6 அடி இருக்கும். இதன் கால்கள் மிகவும் வலிவுள்ளவை. ஒவ்வொரு காலிலும் மூன்று விரல்களிருக்கும். கழுத்து நீண்டும் உடல் பெருத்தும் இறக்கை சிறுத்தும் இருக்கும். மணிக்கு 30 கல் வேகத்தில் ஓடும் ஆற்றலுடையது.

ஈமு, கேசாவரி (Casuawary) இனத்தைச் சார்ந்தது. கேசாவரி இனத்திற்குத் தலையில் 'கவிகை' (தொப்பி) போன்ற அமைப்பு இருக்கும். ஆனால் ஈமுவுக்கு இவ்வமைப்பு கிடையாது. நிலத்தில் ஒரு சிறு குழியைத் தோண்டி அதில் 9 முதல் 13 முட்டைகள் வரை இடும். முட்டை பெரிதாக இருக்கும். முட்டை இட்டதும், ஆண் பறவை பெண்பறவையைத் துரத்திவிட்டுத் தானே, 70 முதல் 80 நாள்கள் வரை அடைகாக்கும். ஈமு ஆத்திரேலியாவின் தேயப் பறவையாகும். அந்நாட்டினர் ஈமுவின் உருவத்தை 1942 முதல் 1944-ஆம் ஆண்டு வரை அஞ்சற்றலையில் பொறித்து, வெளியிட்டு மகிழ்ந்தனர்.

கீவி (Kiwi): கீவி நியூசிலாந்து தீவுகளில் மட்டுமே காணப்படுகிறது. இது நெருப்புக்கோழி இனத்தைச் சார்ந்தது. மரங்களின் வேர்களில் குழிபறித்து, பகலில் அக்குழியில் பதுங்கி வாழும். இரை தேட இரவில் வெளிவரும். இதன் அலகு மிகவும் நீண்டிருக்கும். அலகின் நுனியில் மூச்சுத் துளைகளிருக்கின்றன. மண்புழு இருக்குமிடத்தை மோப்பம் பிடித்து, அதன் நீண்ட அலகினை மண்புழு இருக்குமிடத்தில் செருகிப் புழுவை வெளியில் இழுத்து உண்ணும். மயிர்கள் அடர்ந்திருப்பதனால், இறக்கையே இல்லாதது போலிருக்கும். கால்கள் பெரியவாக இருக்கும். ஆகவே, இது மிகவும் விரைந்தோடும் இயல்புள்ளதாக இருக்கிறது.

இக்....கீ....வீ....இக்...கீ...வீ என்று ஒலி எழுப்புவதினால்தான் கீவி என்று பெயர் பெற்றது. ஓராண்டிற்கு இருபெரிய முட்டைகளிடுகின்றன. ஒவ்வொன்றும் 5 விரற்கிடை நீளமும் 3 விரற்கிடை அகலமும் இருக்கும். முட்டையின் நிறை $\frac{1}{4}$ தூக்கு இருக்கும். நெருப்புக் கோழி இனத்திலேயே கீவிதான் மிகச் சிறிய உயிரியாகும். பறக்கின்ற ஆற்றல் இல்லையெனினுங்கூட, அவைதம் வாழ்வு பிறரால் வியக்கத்தக்க வகையில் அமைந்திருப்பது, அறிய அறியச் சுவைதரும் பகுதி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. O

# ஓவியர் இரெம்பிராந்து.

—இறைமகிழ்நன், தஞ்சாவூர்.

இரெம்பிராந்து ஒரு புகழ் மிக்க வண்ண ஓவியர். இற்றைக்கு ஏறத்தாழ 370 ஆண்டுகட்கு முன், அஃதாவது 1606–ஆம் ஆண்டில், ஆலந்து நாட்டில் உள்ள இலீதன் (Leyden) என்னும் நகரில் பிறந்தார். இவர் தந்தை ஓர் ஆலை உரிமையாளர். தம் மகனை ஒரு வழக்குரைஞராக்க வேண்டுமென்று, அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனால் இரெம்பிராந்து வண்ண ஓவியங்கள் தீட்டுவதில் ஆர்வம் மிகக் காட்டினர். தொடக்கத்தில் சுவானன்பரோ (Swanenburgh) என்பவரிடம் ஓவியப் பயிற்சி பெற்றார். இவரது திறமையைக் கண்டு வியந்த சுவானென்பரோ அக்காலத்தில் தம்மிலும் புகழ்பெற்று விளங்கிய ஓவியர் பியத்தர் இலாசுமன் (Pieter Lastman) என்பாரிடம் மேலும் ஓவியப் பயிற்சி பெறுமாறு இவரை அனுப்பினர்.

இவர் சிறுவராக இருந்தபோதே, நகரமாந்தர்களும், சிற்றூர் மாந்தர்களும் மரக்காலணிகளோடு நடந்து செல்லும் காட்சிகளையும், கால்வாய்களிலும் ஆறுகளிலும் மிதந்து செல்லும் படகுகளையும், வேகமாக ஓடும் மூடுவண்டிகளையும் கூர்ந்து நோக்கும் வழக்கமுடையவராவார். திருநூலில் (Bible) படித்தவைகளைக் காட்சிகளாகக் கற்பனை செய்து, வண்ண ஓவியங்களாக்குவதில் தனிப்பட்ட அக்கறை காட்டினர். இன்று உலகமெங்கணும் உள்ள அருங்காட்சியகங்கள் (Museums) பலவற்றில் காணப்படும் திருநூல் காட்சிகள் தொடர்பான ஓவியங்கள் இரெம்பிராந்து வரைந்தவையே. தம் பெற்றோரின் உருவங்களை வண்ண ஓவியங்களில் தீட்டி அவர்களுக்குக் காணிக்கையாக்கி அவர்களை மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்தார்.

அக்கால ஓவியர்கள் கவர்ச்சிமிக்க காட்சிகளைத் தேடி நாடு முழுவதும் அலைந்து திரிவர். ஆனால், இரெம்பிராந்துவின் ஓவியக் காட்சிகளோ, ஒவ்வொருநாளும் அவரைச் சுற்றிலும் உள்ள மக்களின் பல்வேறு வாழ்க்கை நிலைகளும், இருப்பிடத்தில் இருந்து கண்ணுக்கெட்டிய தொலைவுவரை அவர் காணும் காட்சிகளுமேயாகும். மக்களின் முகத்தில் உணர்ச்சி வேறுபாடுகளால் தோன்றும் பல்வேறு வகையான முக மாறுதல்களை ஓவியங்களாக்கி மகிழ்வர். அது மட்டுமின்றி, அவரே முகம் பார்க்கும் கண்ணாடி முன் நின்று சிரித்தும், மகிழ்ந்தும், துயருற்றும், தமது முகத்தில் தோன்றும்

மாறுபாடுகளை ஊன்றிப் பார்த்து அவற்றையே ஓவியங்களாகத் தீட்டுவார். இவ்வாறெல்லாம் (மற்ற ஓவியர்களின் முறைகளைப் பின்பற்றுவதை விடுத்து) தமக்கெனவொரு சிறந்த தனிவழியை மேற்கொண்டார். இவ்வோவிய வல்லுநர் தமது தூரிகையால் ஓரிரு வண்ணக் கோடுகளே வரைந்து அவற்றை ஒப்பற்ற ஓவியங்களாக்கும் திறமை பெற்றிருந்தார்.

தங்களைப் போன்று ஓவியங்கள் வரைந்து கொள்ளவும், இவர் வரைந்த அழகோவியங்களை விலைகொடுத்து வாங்கவும் வந்த மக்கள் கூட்டம் எப்பொழுதும் இவரது ஓவியக்கூடத்தை நிறைத்த வண்ணமேயிருக்கும். இவர் தம் காலத்தில் எவருமே வரைந்திராத அளவு ஐநூற்றுக்கும் மேற்பட்ட அழகோவியங்களைத் தீட்டியிருக்கிறார். அக்கால ஓவியத் துறையில் இவர் தன்னிகரற்றுத் திகழ்ந்தார்.

இவர் வரைந்த ஓவியங்களிலேயே மிகச் சிறந்தது "இரவுக் காவல்" (The Nightwatch) என்னும் ஓவியமாகும். இன்றும்கூட இவ்வோவியம் ஆம்சுதர்தாம் நகரில் உள்ள கலைக் கூடத்தில் அருங்காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இவ்வோவியத்தை இவர் வரைந்து முடிக்கும் தருவாயில்தான், இவர்தம் அன்பிற்கினிய துணைவியார் இறந்துவிட்டார் என்ற துயரச்செய்தி இவருக்குக் கூறப்பட்டது. அதிர்ச்சி மிக்க இத் துயரத்தில் இருந்து கடைசி வரையில் அவரால் மீளவே முடியவில்லை.

பழங்காலக் கலைச் செல்வங்களையும், ஓவியங்களையும், எவ்விலையாயினும் கொடுத்து வாங்கிச் சேர்க்கும் பழக்கம் இவரிடம் இருந்தது. இரெம்பிராந்து எவரையும் எளிதில் நம்பிவிடும் மனப்பாங்கும், ஒருவரைப் பார்த்தவுடனேயே அவர்மீது தூய அன்பு செலுத்தும் பண்பும் உடையவர். இவ்விரு பண்புகளையும் புரிந்து கொண்ட இவர் நண்பர்கள் இவரிடமிருந்து எளிதாகக் கடன் பெற்றுக் கொண்டு திருப்பி யளிக்காமல் இருந்துவிட்டனர். இதனால் இவரது பொருள்நிலை மிகவும் சீர்கேடடைந்தது. கடைசி நாள்களில் தமது வீட்டையும் விற்று மிகுந்த வறுமையில் வாடினார். பின்னர் இவர் புகழும், ஓவிய வணிகமும் மங்கத் தொடங்கின. கடனைத் திருப்பித்தர வழியில்லாததால் சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் மேலும் அதிர்ச்சியுற்று உள்ளம் தளர்ந்தார். சிறையில் இருந்த போதும் கூட மேலும் மேலும் ஓவியங்கள் தீட்டி மகிழ்ந்து மன அமைதி பெற்றார்.

கரையேற முடியா வறுமையில் ஆழ்ந்து, மிக்க துயர் உற்று, 1669-ஆம் ஆண்டின் இறுதியில், இவ்வுலகினின்றும், புகழ் மிக்க ஓவியர்" இரெம்பிராந்து (REMBRANDT) மறைந்தார்.

# பாவாணர் பயன் மொழிகள்.

தொகுப்பு-வை. பழம்.

0 நாகரிகம் என்பது மக்களின் திருந்திய வாழ்க்கை. அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அது எல்லாப் பொருளையும் தமக்கும் பிறர்க்கும் பயன் படுத்துவது.

0 உலகில் முதன் முதல் நாகரிகப் பண்பாட்டைக் கண்டவரும் அதை உலகெங்கும் பரப்பினவரும் தமிழரே.

0 சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்துக் காட்டுவது இலக்கியம். சிறந்த மொழிக் குறிக்கோளான அமைப்பை எடுத்துக்காட்டுவது இலக்கணம்.

0 பொருளிலக்கணம் தமிழிலன்றி வேறெம் மொழியிலுமில்லை.

0 உலக மொழிகள் மூவாயிரத்துள் (2796), தொன்மை, முன்மை' எண்மை, ஒண்மை; இளமை, வளமை; தாய்மை, தூய்மை' செம்மை, மும்மை; இனிமை, தனிமை; பெருமை, திருமை; இயன்மை, வியன்மை ஆகிய பதினறு சிறப்புகளை ஒருங்கே யுடையது தமிழ் ஒன்றே.

0 தமிழின்றேல் தமிழனில்லை. ஆதலால் தமிழ் அழியின் தமிழன் என்னும் இனமும் நாளடைவில் மறைந்துபோம்.

0 எல்லாரும் ஓரினம் என்பதும் எல்லாரும் வாழவேண்டும் என்பதுமே, தமிழன் தொன்று தொட்டுக் கடைப்பிடித்துவரும் நெறிமுறைகளாகும்.

0 தமிழகத்திற் சேர சோழ பாண்டிய மூவேந்தராட்சி நீங்கிய தற்கும் அவர்களின் ஒற்றுமையின்மையே கரணியம். மூவேந் தரும் ஒற்றுமையாயிருந்தவரை அசோகப் பேரரசனும் தமிழகத்துட் கால்வைக்க முடியவில்லை.

0 மொழி என்பது மக்கள் வாயில் வழங்கும் ஒலித்தொகுதியே அன்றி, அவரினும் வேருன ஓர் உயிரி அல்லது உருவம் அன்று.

0 மக்கள் தம் தாய் மொழியைப் பேசினுல் அது வாழும்; அன்றேல் மாளும்.

0 மொழியின் உயர்வு தாழ்வு அவற்றின் இலக்கண இலக்கிய சொல் வளத் தன்மைகளைப் பொறுத்ததேயன்றி, அவற்றைப் பேசுவோர் தொகையைப் பொறுத்ததன்று.

- ஆங்கிலர் தமிழை விரும்பிக் கற்று அதன் சிறப்பை அவரே நமக்கு எடுத்துக் காட்டினர். தமிழைத் தூய்மையாகப் பேச வேண்டுமென்பதே அவர் கருத்து. தமிழர்தாம் ஆங்கிலச் சொற்களை வேண்டாது (அனுவசியமாய்) தமிழிற் கலந்து பேசுகின்றனர்.
- ஒற்றுமை நன்றே, ஆயினும் ஒற்றுமை கையாளப் பெறும் மக்கட்பரப்பளவு, அது வேண்டப் பெறும் வினையை அல்லது செய்தியைப் பொறுத்தது.
- தன்மானத்திற்கும் பகுத்தறிவிற்கும் ஒவ்வாத அடிமைச் செயலும் பயனில் முயற்சியுமான செய்திகளில், சிற்றளவான பண்பட்ட மக்கட் பரப்பிலும் கூட ஒற்றுமை யமையாது.
- ஒவ்வொரு நாட்டிலும் மொழியே மக்கள் முன்னேறும் வழியாம். கூட்டுறவிற்கு வேண்டும் கருத்தறிவிப்பும் நல்வாழ்விற்கு வேண்டும் அறிவுப் பேறும் மொழி வாயிலாகவே இயலும்.
- ஒரு நாட்டில் பல அரசியற் கட்சிகளிருப்பினும், அவற்றிற்கு ஆட்சிவகை அல்லது முறைபற்றிக் கருத்து வேறுபாடிருக்கலாமேயன்றி, தாய்மொழி வளர்ச்சிபற்றியும் கல்வித்துறையிலும் அவ் வேறுபாடிருத்தல் கூடாது.
- உலகிற் சிறந்த இசை இந்திய இசையே. அதிற் சிறந்தது தமிழிசை.
- தமிழர் இன்னிசைக் கலையிலும் நாடகக் கலையிலும் சிறந்திருந்ததினால், மொழியொடு அவ்விரு கலைகளையும் சேர்த்து, தமிழை இயல் இசை நாடகமென முத்தமிழாய் வழங்கினர். இத்தகைய மொழியமைப்பும் வேறெங்கணுமில்லை.
- தமிழ் மருத்துவம் சித்த மருத்துவம் எனப்படும். பொன்னுக்கமும் சித்தர் கலையே.

O

---

## கழுதை அழுத கதை

ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் மலேசியா சிங்கை வாழ் தமிழர்களின் அழைப்பிற் கிணங்கி, தமிழின் மேன்மையையும், தமிழர் முன்னேற்றத்திற்குரிய வழி முறைகளையும் விளக்கும் நோக்குடன் சுற்றுச் செலவு மேற்கொண்டுள்ளார். ஆகையால் 'கழுதை அழுத கதை' இவ்விதழில் இடம் பெறவில்லை. அன்பர்கள் பொறுத்தருளுக.

—அமைச்சர்

# மண்ணின்றி வளரும் பயிர்கள்.

—ஊரி அலெச்சாந்திரோ.

காய்களும், கனிகளும், பூக்களும் செழித்து வளர்கின்றன; ஆனால், ஒரு சிற்றெடை மண்கூடத் தேவையில்லை. அவை காற்றி லேயே வளர்கின்றன! மாசுக்கோவில் இந்தக் கண்டு பிடிப்புக்கு ஐ. முராசு என்பாரது தலைமையிலுள்ள ஆய்வுக்குழு தனி உரிமை பெற்றுள்ளது. மண் வளமில்லை என்பது மட்டுமன்றி, வேர்களுக்குச் சார்பும் கூட இல்லாமல், அங்குப் பயிர்கள் வளர்கின்றன. இது 'வளியூட்டமுறை' என்று அழைக்கப்படுகிறது.

வேர்களெல்லாம், காற்றில் தொங்கிக் கொண்டிருந்தால், அவை ஊட்டத்தை எங்ஙனம் பெற முடியும் என்று நீங்கள் வினவலாம். சரியாக, முறைப்படி, அளவீடு செய்யப்பட்ட சத்துக் கரைசல், இயல்பான நீர்ப் பீச்சுக் குழல்களின் மூலம், வேர்களின் மீது பாய்ச்சப் படுகிறது. எத்தகைய பகுதியிலும் உழவியல் விளைபொருள்களை விளைவிக்க இது மிகச் சிறந்த முறை அன்றோ? நகரங்களிலுள்ள கட்டடத்தின் ஓர நடைகளிலும், கப்பல்களிலும், விண்வெளிக் கலன்களிலும் நாம் காய் கனிகளை விளைவித்து விட முடியும் அன்றோ?

பயிர் வளர்ப்பு வரலாற்றிலேயே முதன் முறையாகக் காற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் வேர்களுடன்கூடிய, செடிகளை நாம் ஆய்வுக் கூடத்தில் காண்கிறோம். செடியின் வளர்ச்சிக்கு உகந்தாற் போல, அதன் சத்துப் பொருள் தேவைகளை, வேர்களின் மீது குறித்த காலத்தில் பாய்ச்சப்படும் "மழை" நிறைவு செய்கிறது. அதுவும், ஒரு இயல்பான கடிகாரத்துடன் இணைக்கப்பட்டுக், குறிப்பிட்ட கால இடைவெளியில் தானாகவே இயங்குகின்றது.

பயிர்களுக்குத் தேவையான ஊட்ட நீர்மத்தை அளிப்பதற்கும், சுற்றுப்புறக் காற்று மண்டலத்தின் வெப்ப நிலையையும், ஈரப் பதனையும் கட்டுப்படுத்தவும், பல சிக்கலான தன்னியக்கக் கட்டுப் பாட்டு முறைகள் அங்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த முறையின் மூலம், காய்கனிகளின் விளைச்சல் 20—50 விழுக்காடு மிகுதியாகிறது என்பதும் கண்டு பிடிக்கப்பட்டது. மேலும், அந்தக் காய், கனிகளில் உயிரகச் சத்தும் மிகுதியாக உள்ளன. அந்தக் கூடத்தில் மலர்ந்துள்ள பூக்கள், மிகப் பெரியவையாகவும், நல்ல நிறத்துடனும் இருப்பதை எவரும் காணலாம். O

# தெரிந்து கொள்ளுங்கள்

நெஞ்சாங்குலையிலும் மின்சாரம் உண்டாகிறது என்பதறிய நீங்கள் வியப்புறக் கூடும். ஆனால் அஃது உண்மைதான். இதைவிட பெரிய உண்மை, அம் மின்னழுத்தத்தை அளந்தறிய ஒரு கருவியும் உள்ளதுதான்!

நமது நெஞ்சாங்குலை ஒவ்வொரு முறையும் துடிக்கும்போது, நெஞ்சத்தில் உள்ள சதை அடைப்பான்கள் குருதி செல்லும் வழிகளை அடைத்தும், திறந்தும் முறையே வேலை செய்கின்றன. குருதி வெளியேறும் போது, அது வெளியேறும் விரைவினாலும், அடைப்பான்களின் அசைவுகளாலும் நெஞ்சாங்குலையில் மின்சாரம் உண்டாகிறது. நீரின் விரைவினால் மின்விசை உண்டாவது போல, நம் நெஞ்சாங்குலையில் உண்டாகும் இம் மின்விசையின் அழுத்தம் முதலியவற்றை அளக்க ஒரு கருவியும் உண்டு. அக்கருவியின் பெயர் மின்–நெஞ்சாங்குலைத்துடிப்பு வரைவி (Electrocardiograph) என்பதாகும்.

நெஞ்ச மின் விசையை அளப்பதும், அதற்கென ஒரு கருவியும் தேவைதானா? ஆம், தேவைதான். ஏனெனில், நெஞ்சத்தை நெருங்கிய பாகங்களில் ஏற்படும் உடற் கோளாறுகள் நெஞ்ச நோயால்தான் ஏற்படுகின்றவா என்றறியலாம். ஒவ்வொருவர் உடல் நிலைக்கு ஏற்றவாறும், ஒவ்வொருவருடைய நெஞ்சத் துடிப்பிலும், ஒரு குறிப்பிட்ட அளவு நெஞ்சமின்னழுத்தம் இருக்க வேண்டும். இவ்வழுத்தம் மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ இருப்பின் நம் நெஞ்சமும் உடலும் நன்னிலையில் இல்லை என்றும், நோய் வரப் போகிறது அல்லது உடலுக்குள்ளே நோய் வந்து விட்டது என்றும் நாம் அறிந்து கொள்ளலாம். —இறைமகிழ்நன்.


**தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.**

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!



—மா. செந்தாமரை.

**1.** ஒரு வீட்டில் தாத்தா தம்பேரனிடம் வேடிக்கையாக ஒரு கணக்குப் போட்டார். "ஒரு எண்ணை நினைத்துக் கொள். அதை 5-ஆல் பெருக்கி, அத்துடன் 9-ஐக்கூட்டு. பின் அதை 4-ஆல் பெருக்கி, 4-ஐக்கூட்டு. பின் அதை 5-ஆல் பெருக்கு. பின் பெருக்குத் தொகையை 100-ஆல் வகு. இப்பொழுது ஈவு என்ன?" என்று தாத்தா கேட்டதற்குப் பேரன் 5 என்றான். தாத்தா உடனே பேரன் நினைத்த எண்ணைச் சொன்னால் அந்த எண் என்ன? பையன் ஈவு 3 எனச் சொல்லியிருந்தால் தாத்தா என்ன விடை சொல்லியிருப்பார்?

**2.** எறும்பூர், குறும்பூர், அரும்பூர் என்ற மூன்று ஊர்களும் முக்கோண வடிவில் உள்ளன. எறும்பூருக்கும், குறும்பூருக்கும் உள்ள தூரம் 7கல். அரும்பூருக்கும், எறும்பூருக்கும் உள்ள தூரம் 9கல். குறும்பூருக்கும் அரும்பூருக்கும் இடையே சுரும்பூர் என்னும் ஊர் உள்ளது. குறும்பூர், சுரும்பூர் தாங்கும் உச்சிக்கோணமும், சுரும்பூர், அரும்பூர் தாங்கும் உச்சிக்கோணமும் சமம். எறும்பூருக்கும், சுரும்பூருக்கும் உள்ள தூரம்; குறும்பூருக்கும், அரும்பூருக்கும் உள்ள தூரத்தில் பாதி. குறும்பூருக்கும், சுரும்பூருக்கும் உள்ள தூரம்; சுரும்பூருக்கும், அரும்பூருக்கும் உள்ள தூரத்தில் $\frac{1}{3}$ பங்கு. எறும்பூருக்கும், சுரும்பூருக்கும் உள்ள தூரத்தையும் குரும்பூருக்கும் சுரும்பூருக்கும் உள்ள தூரத்தையும் கண்டுபிடி.

**3.** 1887-இல்ஒருவரது அகவை அவர் பிறந்த ஆண்டின் எண்களின் கூடுதலுக்குச் சமம். அவர் அகவை என்ன?

விடைகள்


1. ஈவிலிருந்து 2-ஐக் கழித்தால் விடைவரும். 3;1
2. எறும்பூர்–சுரும்பூர் 6கல். குறும்பூர்–சுரும்பூர் 3கல்.
3. அவரது அகவை 21

# ஆசிரியரின் அயல் நாட்டுச் செலவு.

நம் செந்தமிழ் மொழியின் சிறப்பியல்புகளை வெளி நாட்டினருக்கும் விளக்கிக் காட்டும் பொருட்டு ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் இப்பொழுது சிங்கப்பூர், மலேசியா, பினாங்கு முதலிய கீழை நாடுகளில் சுற்றுப்போக்கு மேற்கொண்டுள்ளார்கள்.

தி.பி. 2005 கும்பம் 26 (10—3—74) ஞாயிறன்று பகல் 1 மணியளவில் கிளம்பிய வானூர்திவழிப் பாவலரேறு அவர்கள் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

சென்னை மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தில் தமிழன்பர்களும், பேராசிரியர்களும் மற்றும் குடும்பத்தினரும் திரளாக வந்திருந்து வாழ்த்துரைத்து ஆசிரியர் அவர்களை வழியனுப்பி வைத்தனர்.



பாவலரேறு அவர்கள் அன்று மாலை 7மணி அளவில் சிங்கப்பூர் சென்றடைந்தார்கள். சிங்கை-பாயலேபார் வானூர்தி நிலையத்தில் தமிழ்நாட்டுக் காரைக்குடி இராமசாமித் தமிழ்க் கல்லூரியின் நிறுவனர் திரு. இராம.பெரியகருப்பன் அவர்களும், திரு. முல்லைவாணன் முதலிய பாவலர்கள் எழுத்தாளர்கள் ஆகியோரும் பெருந்திரளாக வந்திருந்து ஆசிரியர் அவர்களை மாலை சூட்டி வரவேற்றனர்.

சிங்கப்பூரிலிருந்து பாவலரேறு அவர்கள் மலேசியா, பினாங்கு ஆகிய அண்டை நாடுகளில் சுற்றுப் போக்கு நிகழ்த்துவார்கள்.

இங்கிலாந்து பிரான்சு ஆகிய மேலை நாடுகளிலிருந்தும் ஆசிரியர் அவர்கட்கு அழைப்பு வந்துள்ளது. இனி, அங்கும் சென்று நம் அருந்தமிழின் சிறப்பியல்புகளை விளக்கி, நலமுடன் வருவார்களாக வென்று பாவலரேறு அவர்களை நாம் வாழ்த்துவோமாக!

தென்மொழி மின் அச்சகம், கடலூர்- 607001. தமிழகம்.